**ஏப்ரல் – 12**

# TNPSC துளிகள்

❖ திராவிட இயக்கத்தின் மறைந்த தலைவர் W.P.A. சௌந்தரபாண்டியன் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் தமிழக அரசானது அவருக்கு ஒரு மணி மண்டபம் அமைக்க உள்ளது.


❖ இந்திய மணல்சிற்ப கலைஞரான ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சுதர்சன் பட்நாயக், இங்கிலாந்தின் டோர்செட் என்ற நகரில் நடைபெற்ற சாண்ட்வேர்ல்ட் 2025 என்ற ஒரு சர்வதேச மணல் கலை விழாவின் போது மணல்சிற்ப கலைக்குச் சிறந்தப் பங்களிப்பு செய்ததற்காக மதிப்புமிக்க பிரெட் டாரிங்டன் மணல்சிற்ப மாஸ்டர் விருதைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

❖ சத்தீஸ்கர் மாநிலத்தின் மின் உற்பத்திக் கழக நிறுவனம் (CSPGCL) ஆனது, கோர்பா மாவட்டத்தில் முதல் உய்ய மிகை நிலை அனல் மின் நிலையத்தினை (SCTPP) அமைக்க உள்ளது.

❖ பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அவ்வப்போது வெடிக்கும் எரிமலைகளில் ஒன்றான மவுண்ட் கன்லான் சமீபத்தில் வெடித்தது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நீலகிரி வரையாடுகளின் கணக்கெடுப்பு 2025





❖ தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகியவை இணைந்து கேரளாவில் உள்ள 89 கணக்கெடுப்பு தொகுதிகளிலும், தமிழ்நாட்டில் உள்ள 176 கணக்கெடுப்பு தொகுதிகளிலும் நீலகிரி வரையாடுகளின் கணக்கெடுப்பை மேற்கொள்ள உள்ளது.

❖ எரவிகுளம் தேசியப் பூங்கா நிறுவப்பட்டதன் 50வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் இந்த ஒருங்கிணைந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

❖ மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் நீலகிரி வரையாடு இனம் ஆனது, மிக முதன்மையாக தென்னிந்தியாவின் மலைப்பகுதிகளில் காணப்படுகிறது.

- எரவிகுளம் தேசியப் பூங்காவில் இந்த இனம் மிகவும் அதிக எண்ணிக்கையில் காணப் படுவதோடு மூணாறு பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இப்பகுதியை ஒரு முக்கியச் சுற்றுலாத் தலமாக இது மாற்றுகிறது.

## கனிமங்கள் கொண்ட நிலங்கள் மீதான புதிய வரி 2025




- கனிமங்கள் கொண்ட நிலங்கள் புதிய வரி அறிமுகப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் 2,400 கோடி ரூபாய் கூடுதல் வருவாயை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தமிழ்நாடு மாநில அரசானது, கனிமங்கள் கொண்ட நிலங்கள் மீது வரி விதிப்பதற்கும் அவற்றை வசூலிப்பதற்கும் "தமிழ்நாடு கனிமங்கள் கொண்ட நில வரிச் சட்டம், 2024" என்ற ஒரு புதிய சட்டத்தை இயற்றியுள்ளது.
- இச்சட்டம் மற்றும் விதிகளின்படி, 32 கனிமங்களுக்கு கனிமங்கள் கொண்ட நில வரி விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- பெரிய மற்றும் சிறியக் கனிமங்களின் குத்தகைதாரர்கள் ஏப்ரல் 04 ஆம் தேதி முதல் கனிம நில வரியைச் செலுத்த வேண்டும்.
- சில்லிமனைட்டுக்கு அதிகபட்சமாக டன்னுக்கு 7,000 ரூபாய் வரித் தொகையும் மற்றும் வெண் களிமண்ணுக்கு மிக குறைந்த பட்சமாக டன்னுக்கு 40 ரூபாய் வரித் தொகையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## ஆளுநரின் இரண்டாம் நிலை கருத்து


- ஆளுநரால் முன்னதாக நிராகரிக்கப்பட்ட முன்மொழியப்பட்டுள்ள ஒரு சட்டம் ஆனது, அம்மாநிலச் சட்டமன்றத்தினால் இரண்டாவது முறையாக சமர்ப்பிக்கப்படும் போது, குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒரு மசோதாவை ஒதுக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ், முதல் முறையாக ஒப்புதலுக்காக அனுப்பப் பட்ட 10 மசோதாக்களுக்கு தமிழக ஆளுநர் ஒப்புதல் ஏதும் அளிக்காமல் நிலுவையில் வைத்திருந்தார்.

- இருப்பினும், அந்த மசோதாக்கள் மாநிலச் சட்டமன்றத்தினால் மீண்டும் நிறைவேற்றப் பட்டு இரண்டாவது முறையாக மீண்டும் சமர்ப்பிக்கப்படும் போது ஆளுநர் அவற்றைக் குடியரசுத் தலைவரிடம் பரிசீலனைக்கு அனுப்ப முடிவு செய்தார்.
- ஆளுநர் மசோதாவை குடியரசுத் தலைவர் பரிசீலனைக்கு ஒதுக்க விரும்பினால் அவர் அதனை முதல் கட்டத்திலேயே செய்திருக்க வேண்டும்.
- ஒரு மசோதாவானது, "200வது சரத்தின் முதல் விதியின்படி மறுபரிசீலனைக்குப் பிறகு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டால், ஆளுநர் உடனடியாக அல்லது மிகவும் அதிகபட்சம் ஒரு மாத காலக் கட்ட வரம்பிற்கு உட்பட்டு அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்" என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.




# தேசியச் செய்திகள்

## 7வது போஷன் பக்வாடா 2025




- போஷன் பக்வாடா என்பது ஊட்டச்சத்துக் குறைபாட்டை நன்கு எதிர்த்துப் போராடச் செய்வதையும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நன்கு மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட நாடு தழுவிய பிரச்சாரமாகும்.
- இது போஷன் அபியான் என்ற முன்னெடுப்பின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு பிரச்சாரத்தில் நான்கு முக்கியக் கருப்பொருள்களில் கவனம் செலுத்தப்

படுகிறது.

- இது போஷன் டிராக்கரின் பயனாளி மாதிரியினை பிரபலப்படுத்துவதையும், மிகவும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டின் சமூக அடிப்படையிலான மேலாண்மை (CMAM) அணுகுமுறையின் மூலம் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிர்வகிப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரம் ஆனது, இந்தியா முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த முயல்கிறது.

### உவர்நீர் மீன்வளர்ப்பு மையங்கள் 2025

- ஹரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலங்களில் உவர்நீர் இறால் மீன்வளர்ப்பு குறித்த மறுஆய்வுக் கூட்டம் ஆனது மும்பை நகரில் நடைபெற்றது.
- இந்தக் கூட்டம் ஆனது, உவர்நில வளங்களின் உற்பத்தித் திறனை மீன்வளர்ப்புக்குப் பயன்படுத்தி, வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த 4 மாநிலங்களிலும் சுமார் 58,000 ஹெக்டேர் பரப்பிலான உவர்நிலம் அடையாளம் காணப் பட்டுள்ளது ஆனால் தற்போது சுமார் 2,608 ஹெக்டேர் மட்டுமே இந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது.
- உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு என்பது உவர்நீர் ஊடுருவிய நிலங்களை (மிகப் பெரும்பாலும் வழக்கமான வேளாண்மைக்குப் பொருத்தமற்றது) உள்நாட்டு உவர்நீர் வாழ் உயிரின வளர்ப்பிற்குப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது.
- கடல் சார் உணவு ஏற்றுமதி மதிப்பில் இறால் ஏற்றுமதியானது 65 சதவீதத்திற்கும் மிக அதிகமானப் பங்கினைக் கொண்டுள்ளதுடன் இந்தியா உலகளவில் வளர்ப்பு இறால் உற்பத்தியில் இரண்டாவது பெரிய நாடாக உள்ளது.




## சர்வதேசச் செய்திகள்


### ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தம் – வங்காளதேசம்

- வங்காளதேசம் ஆனது சமீபத்தில் ஆர்ட்டெமிஸ் திட்டத்தில் கையொப்பமிட்ட 54வது நாடாக மாறியுள்ளது.

- இது நிலவின் மேற்பரப்பில் நீண்டகாலக் குடியிருப்புகளை உருவாக்கி அதன் மூலம் செவ்வாய்க் கிரகத்திற்கு முன்னேறும் சில திட்டங்களுடன் நிலவினை நன்கு ஆய்வு செய்திடச் செய்வதற்கான அமெரிக்கா தலைமையிலான ஒரு முன்னெடுப்பாகும்.
- இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மிகவும் அதிகரிக்கவும் பூமியின் எல்லைகளுக்கு அப்பால் உள்ள களத்தை ஆராயவும் இந்தியா 2023 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த திட்டம் ஆனது நிலவின் சுற்றுப்பாதையிலும் மேற்பரப்பிலும் நிரந்தர இருப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## நெகிழி மாசுபாடு குறித்த UNHRC தீர்மானம்




- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையானது நெகிழி மாசுபாடு, பெருங்கடல் பாதுகாப்பு மற்றும் வளமான சூழலுக்கான மனித உரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு தீர்மானத்தினை முதன்முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது.
- நெகிழி மாசுபாடு, பருவநிலை மாற்றம் மற்றும் பல்லுயிர்ப் பெருக்க இழப்பு ஆகியவை உலகப் பெருங்கடல்களின் வளத்தின் மீது பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன என்பதோடு அடிப்படை மனித உரிமைகளை மிக ஆபத்தில் ஆழ்த்துகின்றன என்றும் இந்தத் தீர்மானம் வெளிப்படையாகக் கூறுகிறது.
- உற்பத்தி மற்றும் நுகர்வு முதல் கழிவகற்றல் வரையில் நெகிழியின் முழு வாழ்க்கைச் சுழற்சியிலும் மிகவும் தீர்க்கமான, ஒருங்கிணைந்த நடவடிக்கையினை மேற்கொள்ள அனைத்து நாடுகளையும் இந்தத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

- சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் தூய்மையான தண்ணீர் ஆகியவற்றின் மீது நுண் நெகிழிகளால் ஏற்படும் பெரும் அச்சுறுத்தல் உட்பட நெகிழி மாசுபாட்டின் பன்மயத் தன்மையையும் இது அங்கீகரிக்கிறது.
- பிரான்சின் நைஸ் நகரில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மாநாடு மற்றும் ஜெனீவாவில் நடைபெற உள்ள நெகிழி மாசுபாட்டை உடன் முடிவுக்கு கொண்டு வருவதற்கான உலகளாவிய ஒப்பந்தத்திற்கான இறுதிச் சுற்று மீதான பேச்சு வார்த்தைகள் ஆகியவை இந்த விவகாரத்தில் மேற்கொள்ள உள்ள சில முக்கியமான நிகழ்வுகளாகும்.

### ஹங்கேரி மற்றும் ICC

- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) இருந்து ஹங்கேரி விலகுவதாக அறிவித்து உள்ளது.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணையின் கீழ் தேடப்படும் இஸ்ரேலியத் தலைவர் பெஞ்சமின் நெதன்யாகு அரசு முறைப் பயணமாக ஹங்கேரிக்கு வந்தார்.
- இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் சர்வதேச நீதிமன்றமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு உள்ளது.
- ஹங்கேரி நாடானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஸ்தாபன உறுப்பினராகும் என்பதோடு இது அதிலிருந்து வெளியேறும் முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடாகவும் மாற உள்ளது.
- இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, சீனா மற்றும் வட கொரியா ஆகிய நாடுகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஒரு பகுதியாக இல்லாத நாடுகளில் அடங்கும் என்பதால் அவை அதன் அதிகார வரம்பை அங்கீகரிக்கவில்லை.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### அழிந்து போன டைர் ஓநாய் மீண்டும் உயிர்ப்பிப்பு

- அமெரிக்காவில் உள்ள ஒரு உயிரியல் அறிவியல் நிறுவனமானது அழிந்து போன ஒரு


விலங்கு இனமான டைர் ஓநாயினை மீண்டும் உருவாக்கியுள்ளது.

- டைர் ஓநாய்கள் (அனோசியான் டைரஸ்), சுமார் 13,000 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போவதற்கு முன்னதாக தெற்கு கனடா மற்றும் அமெரிக்காவில் அதிகளவில் காணப் பட்ட பெரிய வேட்டை நாய்கள் ஆகும்.
- அவை இன்றையச் சாம்பல் நிற ஓநாய்களை (கேனிஸ் லூபஸ்) ஒத்திருந்தன ஆனால் இவை சாம்பல் நிற ஓநாய்களை விட மிகவும் பெரியதாக, வெள்ளை நிறத் தோலுடன் கூடியவையாக இருந்தன.
- டைர் ஓநாய் இனத்தின் மாதிரிகள் ஆனது, சுமார் 13,000 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படும் பல்லிலிருந்தும், 72,000 ஆண்டுகள் பழமையான மண்டை ஓட்டிலிருந்தும் பெறப்பட்டது.
- ஆனால் புதிய குட்டிகள் தற்போது அழிந்து போன அந்த டைர் ஓநாய்களை (100%) முழுவதுமாக ஒத்திருக்கவில்லை.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## வெளிர் தாடை ஈப்பிடிப்பான்





- அரிய வெளிர் தாடை ஈப்பிடிப்பான் (சையோர்னிஸ் போலியோஜெனிஸ்) என்பது அருணாச்சலப் பிரதேசத்தின் நம்சாய் மாவட்டத்தின் நோங் லவுங் (போர் பீல்) வனப்

பகுதியில் காணப்பட்டது.

- இது இந்தியா, வங்காளதேசம், பூடான், மியான்மர் மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளில் காணப்படுகிறது.
- அவை அடர்ந்த, ஈரப்பதம் நிறைந்த வன வாழ்விடங்களில், குறிப்பாக பசுமை மாறாக் காடுகள் மற்றும் வளமான அடி மரங்களுடன் கூடிய பகுதியளவு வகை பசுமை மாறாக் காடுகள் காணப்படுகின்றன.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அதன் பாதுகாப்பு நிலை தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம் ஆகும்.

## சதுப்புநில இடர் குறியீடு 2025

- சுவிட்சர்லாந்து மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சதுப்பு நிலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சுற்றுச் சூழல் அமைப்புக்கான இடர் குறியீட்டை உருவாக்கியுள்ளனர்.
- உலகில் சுமார் 56 சதவீதத்திற்கும் அதிகமான சதுப்புநிலங்கள் ஆனது மிக மோசமான சூழ்நிலையில் அதிக அல்லது கடுமையான ஆபத்தில் இருக்கலாம்.
- மிகவும் மதிப்பு மிக்க சதுப்புநிலங்களில் சுமார் 34 சதவீதம் ஆனது, மிக கடுமையான மற்றும் மீள முடியாத சேதத்தைச் சந்திக்க நேரிடும்.
- இது "செயல்பாட்டு மாற்றம்" என்றும் அழைக்கப்படுகிறது, அதாவது ஒரு சுற்றுச்சூழல் அமைப்பு முற்றிலும் மாறக்கூடும் மற்றும் மீள முடியாமல் போகக் கூடிய நிலையாகும்.
- பிலிப்பைன்ஸ் நாடானது மிகவும் ஆபத்தில் உள்ள நாடுகளில் ஒன்றாகும்.
- இது சுமார் 260,000 ஹெக்டேர்களுக்கும் அதிகமான சதுப்பு நிலங்களைக் கொண்டு உள்ளதோடு மேலும் இது ஏற்கனவே பல புயல்களால் பாதிக்கப்பட்டு வருகிறது.
- சதுப்புநிலங்கள் மட்டும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 65 பில்லியன் டாலர் மதிப்பிலான வெள்ளப் பாதுகாப்பை வழங்குகின்றன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## குமரி ஆனந்தன்

- தமிழ்நாடு மாநிலக் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் குமரி அனந்தன் (93) சென்னையில் காலமானார்.
- அவரி 1977 ஆம் ஆண்டு நாகர்கோவில் தொகுதியில் மக்களவை உறுப்பினராகத்

தேர்ந்தெடுக்கப் பட்டார்.

- அவர் நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் சிறந்தத் தமிழ்ப் பேச்சாளராகவும் விளங்கியவர் ஆவார்.



## 150வது IPU கூட்டம்

- பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தின் (IPU) 150வது குழுக் கூட்டமானது உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரில் நடைபெற்றது.
- இந்த ஆண்டு அப்பொது விவாதத்தின் முக்கியக் கருத்துரு, "Parliamentary Action for Social Development and Justice" என்பதாகும்.
- IPU ஆனது 1889 ஆம் ஆண்டில் பாராளுமன்ற அரசுமுறை உறவுகள் மற்றும் பேச்சு வார்த்தை மூலம் அமைதியை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறிய பாராளுமன்ற உறுப்பினர் குழுவாக நிறுவப்பட்டது.
- தற்போது அது 182 உறுப்பினர்களையும் 15 இணை உறுப்பினர்களையும் கொண்டு உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★